என்.கௌதமன் தலைமை! அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

# ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ பரப்புரை கூட்டத்தை சிறப்பாக செய்திடுவோம்!

## நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்!

நாகை, டிச. 15 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தொகுதி பார்வையாளர்கள் நாகை தொகுதி ஆர்.அருள்செல்வம், கீழ்வேளூர் தொகுதி இரா.சங்கர், வேதாரண்யம் தொகுதி வி. ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்கி கூட்டத்தின் நோக்கம் குறித்து பேசினார்.

கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி பேசியதாவது:

கூட்டத்தில் ஈரோட்டு பெரியார் எழுப்பிய எரிதழலில் சுடரெழுத்துப் புறப்பட்டார் சொல்வேந்தர் அண்ணா! அண்ணாவின் செந்நாவில் அகப்பட்ட முத்துக்களை சேகரித்துக் கொண்டு சிலித்து கிளம்பினார் செந்தமிழ் சித்தர் கலைஞர்! கலைஞரின் வார்ப்படமாய் களங்கள் பல கண்டு கருத்தியல் வானத்தில் கதிரவனாய் ஒளிக்கின்றார் முத்துவேல் கருணாநிதிஸ்டாலின்!. மு.க.ஸ்டாலின் எனும் முழுவீரத்தளபதியின் தானைக்கும் சேனைக்கும் தனிப்பெருமை குவிகின்ற ஆணைக்கும் இடமாக அணிசேர்த்து நிற்கின்ற இளம் தலைவர் உதயநிதி. இளைஞர்களின் உள்ளத்தில் எழுச்சி நதியாக, கழகத்தின் எதிர்கால கணவுகளின் மின்னி மிளிர்கின்றார் உதயநிதிஸ்டாலின், விளையாட்டால் உள் நுழைந்து,

விளையாடடு களமல்ல அரசியல் என்பதனை அனுபவித்து உணர்ந்ததனால் வித்த கர்களின் கைவாளாய் விரமென்னும் மொழி பேசி புத்தகங்கள் வழியே புத்தனைப்போல் ஒளி வீசி வித்தியாச வெளிச்சத்தில் வீறு நடைபோடுகின்ற விளையாட்டுத்துறை அமைச்சர் வெல்லவே பிறந்த நம் துணை முதலமைச்சர் “பூக்கள் நூறு பூக்கட்டும் புவியையெங்கும்” என்று புகன்றாரே மகியுகந்து மாவீரர் மாசேதுங் அவர் வழியில் இருவண்ணக் கொடிக்கு எழுபந்தைந்து வயதொன்று கலை வண்ணம் மிகுந்த கவின் விழா எடுத்த நம் கழகத் தலைவர் தளபதியன் தளபதி இனமான இளந்தென்றல் இளம் தலைவர் அவர்கள் 20ம் தேதி நாகை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

சுந்தர வடிவுடைய சுத்திரச் சூரியனை சார்ந்த குணமுள்ள சமத்துவ சந்திரனை நாகை மாவட்டத்தின் சார்பில் கையில் இருவண்ணக் கொடியோடு இனிரே வரவேற்க அனைவரும் ஒன்று திரள்வோம், நம் சிந்தனையில் கலர்ந்து விட்ட செந்தமிழ் சூரியனை சிறப்பாக வரவேற்க அதற்கான ஏற்பாட்டினை ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும் இந்த கூட்டம் வேண்டி கேட்டுக் கொள்வது என்றும், ஒரணியின் தமிழ்நாடு 2025 சிறப்பு வாக்காளர் தீவிரதிருத்த (எஸ்.ஐ.ஆர்.) களப்பணியில் தங்களை ஈடுப்படுத்திக் கொண்டு சிறப்பாக பணியாற்றிய ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகி கள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்கள், கழக கமிட்டி உறுப்பினர்கள், அனைவருக்கும் இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுகளையும், தெரிவித்துக் கொள்வதோடு அடுத்து புதிய வாக்காளர்களை சேர்த்திடும் பணிகளையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் எனவும், நம் கழகத் தலைவர் தளபதி அவர்கள் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கோட்டுக் கொண்டதற்கினங்க ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சவாடி’ என்றும் பரப்புரையை நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சவாடிகளிலும் இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நடத்தி முடிக்க வேண்டும் எனவும், அவவாறு நடத்தப்படும் பரப்புரை கூட்டத்தை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என்றும், அந்தந்த வாக்குச்வாடிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், வாக்குச்சவாடி பாக நிலை முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டு உறுப்பினர்கள், சார்பு அணியினர், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் சிறப்பான ஏற்பாடுகளை ஒன்றிய. நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் செய்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டது,

கூட்டத்தில் கழக விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், க.மறைலை மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர் மு.சாகுல் ஹமீது, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், மகா.குமார், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், சோபா.மலர் வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரி முத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், எஸ்.பன்னீர்செல்வம், கோ.சிவக்குமார், உமா செந்தாமரைசெல்வன், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி.சுப்பரமணியன், முகமதுசுல்தான், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, இரா.முருகையன், ப.உதயக்குமார், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.துரைராஜ், கேஸ் வீ.செந்தில், பி.முருகானந்தம், கே.எஸ்.சாகுல்ஹமீது, அ.பாரி பாலன், க.சத்தியமூர்த்தி, எஸ்.பால்ராஜ், ஆர்.ஆர்.குலோத்துங்கன், இளம்.சுந்தர், எஸ்.சந்தோஷ், வ.கமல், வெற்றிச்செல்வன், எஸ்.பாலமுரளி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டேனியல்சத்தியா, ஆர்.கே.சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிவகாசியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, சிவகாசி மாநகர திமுக 22வது வார்டு சார்பாக 2000 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் தொடங்கி வைத்தார். மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் முன்னிலை வகித்தார். இதில் திருத்தங்கல் முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் பொன்சக்திவேல், பகுதி கழகச் செயலாளர்கள் கருணாநிதி பாண்டியன், மாரீஸ்வரன், அப்துல் முத்தலிப், மாநகர பொருளாளர் வெள்ளத்துரை பாண்டியன் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கவுன்சிலர் சரவணகுமார் செய்திருந்தார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் திமுக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருமயம் வடக்கு ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியில் சென்னை கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி கற்பக விநாயக பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர். அண்ணாமலை ரகுபதி அவர்களின் ஏற்பாட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கோட்டூரில் நடைபெற்ற மாபெரும் இலவச சிறப்பு மருத்துவ முகாமை புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். நிகழ்வில் டாக்டர். அண்ணாமலை ரகுபதி, ஒன்றியச் செயலாளர் இரா. கணேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருண் சேகர், கே.ஆர்.ராமசாமி, சிவக்குமார், பாலு, முத்து, சரவணன், பொற்செல்வன், ஆனந்தகுமார், கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

2026 சட்டமன்றத் தேர்தலில்

# தி.மு.க. கூட்டணி வலிமையாக உள்ளது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, டிச. 15 –

புதுக்கோட்டையில் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்த அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர்களிடம்பேசுகையில் அண்ணாமலை பகல் கனவு காண்பார், குற்றச்சாட்டை வைப்பார். 77 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளார்கள் என்றால் இறந்தவர்கள், இரட்டை வாக்காளர்கள் நீக்க ப்பட்டுள்ளனர்.

உண்மையான வாக்காளர்கள் எங்களுக்கு தான் வாக்களிப்பார்கள். திமுக கூட்டணி 200 என்ற இலக்கை நிச்சயம் பெரும். அந்தமான் நிக்கோபார் ஶ்ரீலங்கா கேரளா கர்நாடகா எல்லாத்தையும் கலந்து திராவிட நாடு என்று நினைத்து எடப்பாடி பழனிச்சாமி பேசி வருகிறார். இதையெல்லாம் மொத்தமாக கூட்டினால் கூட அதிமுகவுக்கு 210 வராது.

நீதிபதிக்கு பயம் காட்டுகின்ற அச்சுறுத்துகின்ற இயக்கம் திமுக அல்ல. எத்தனை தீர்ப்புகள் வரும் பொழுது நாங்கள் அமைதியாகத் தான் காத்திருக்கின்றோம். நீதிபதி அச்சுறுத்திய வரலாறு எங்களுக்கு கிடையாது நீதியை மதிப்பவர்கள் நாங்கள். நீதிபதியை அச்சுறுத்துபவர்கள் போலியானவர்கள் அந்த இடத்தில் வந்தால் நாங்கள் பொறுப்பல்ல.

திருப்பரங்குன்றத்தில் மலை உச்சியில் வைக்கப்படுகிற சர்வேக் கள் அது. கீழே இருப்பவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக உயரமாக வைக்கப்பட்டுள்ளது. எந்த காலத்தில் அந்தக் கல்லில் தீபம் ஏற்றினார்கள் என்ற ஆதாரத்தை சொல்லிவிட்டு பேச வேண்டும். அந்தக் கல்லில் தீபம் ஏற்றப்படவில்லை அதற்கான ஆதாரம் கிடையாது என்று சொல்லி இருக்கிறார்கள். நீதித்துறையை தி.மு.க.வுக்கு எதிராக கிளப்பி விடுகிற செயல் கண்டிக்கத்தக்கது. நாங்கள் யாரையும் அச்சுறுத்தவில்லை. உச்ச நீதிமன்ற நீதிபதிகளை எல்லாம் தூண்டி விடுகிறார்கள். திமுகவுக்கு எதிராக பாஜகவும் அதை சார்ந்தவர்களும் செய்கின்ற சதி வேலைதான். நியாயத்தின் பக்கம் தான் நாங்கள் நிற்போம்.

ஈடி விவகாரத்தில் அண்ணாமலை சொல்வதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது அதை அரசு பார்த்துக் கொள்ளும். தேர்தல் நேரத்தில் ஒன்றிய அரசு என்ன வேண்டும் என்றாலும் செய்யும் எதையும் எதிர்கொள்ள திமுக தயாராக இருக்கிறது.

மக்கள் மத்தியில் திராவிட மாடல் அரசுக்கு வரவேற்பு இருக்கிறது. திராவிட மாடல் அரசாக இருந்தாலும் ஆன்மீக உணர்வுகளுக்கு மதிப்பளித்து வருகிறோம். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய உணர்வு தமிழர் உணர்வா? இந்து உணர்வா?

நாங்கள் கூட்டத்திற்கு வந்தவர்கள் எல்லாம் நெரிசலில் சாக வேண்டும் என்று நினைக்கக்கூடிய சாடிஸ்ட் கிடையாது. இங்கிருந்து விஜய் செல்லும்போது கூட காவல்துறைக்கு நன்றி தெரிவித்துவிட்டு தான் சென்றார்.

அமித்ஷா எதை வேண்டுமானாலும் சொல்லுவார். நாடாளுமன்ற தேர்தலிலேயே அவர்களது கூட்டணி கலகலத்து போய்விட்டது. அதிமுக என்ன நிலைமையில் இருக்கிறது என்பது பா.ஜ.க.வுக்கு தெரியும். தேர்தல் நேரத்தில் குளத்தை குழப்பிவிட்டு மீன் பிடிக்க முடியுமா என்று பார்ப்பார்கள் அதெல்லாம் இங்கு நடக்காது. இங்கே இருப்பவர் மு.க.ஸ்டாலின்.

நிச்சயமாக மேகதாது அணை விவகாரத்தில் திமுக அரசு துரோகம் செய்யாது. நாங்கள் நீதிமன்றம் மூலமாகவோ நீர்வளத் துறை மூலமாகவோ தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வோமே தவிர ஒரு காலத்திலும் தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்திற்கு எதிராக மேகதாதுவில் அணைக்கட்ட விடமாட்டோம்.

2026 தேர்தலுக்கு எங்களது கூட்டணி சரியாக இருக்கிறது. எங்கள் கூட்டணியில் இருந்து ஒரு செங்கலை கூட உருவ முடியாது.

தமிழ்நாட்டிற்கு பிரதமர் மோடி அமித்ஷா அடுத்தடுத்து வரட்டும் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய பணத்தை தந்து விட்டு வரட்டும். கல்விக்காக, 100 நாள் வேலை திட்டத்திற்காக கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்வதற்காக தமிழ்நாட்டிற்கு வந்து போனால் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்.

ஒன்றிய அரசு வாயில் தேனை தடவிக் கொண்டு பேசினால் ஏமாந்து விடுவார்களா? எங்களுக்கு தரவேண்டிய பணத்தையும் ஜிஎஸ்டி பங்கையும் தந்துவிட்டு தமிழ்நாட்டிற்கு வந்து இதை எல்லாம் செய்துள்ளோம் என்று கூறினால் பாராட்டுகிறோம்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி நகராட்சி வார்டு எண் 18 முத்தாலம்மன் கோவில் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2025–2026 கீழ் ரூபாய் பத்து லட்சம் மதிப்பீட்டில் புதிய நாடக மேடை கட்டிடம் கட்டுவதற்காக வேலையை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தர்ராஜன், பரமக்குடி வடக்கு நகர் கழக செயலாளர் ஜீவரத்தினம், நகராட்சி ஆணையாளர் திருமதி தாமரை, பொறியாளர் கோமதி சங்கர், பரமக்குடி ஆயிர வைசிய சபை தலைவர் பாலுச்சாமி, இணைத்தலைவர் ராசி போஸ், செயலாளர் லெனின் குமார்,நகர்மன்ற உறுப்பினர்கள் சதீஷ்குமார்,கவிதா, வசந்தம் கல்யாணி, மற்றும் மும்மூர்த்தி, வார்டு செயலாளர் மனோகரன், வார்டு பிரதிநிதி கார்த்திக் கழக நிர்வாகிகள் முத்தரசன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கொளத்தூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை,டிச.15–

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 297 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (13.12.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 66அ, காமராஜர் நகர், காந்தி நகர் சந்திப்பு, திரு.வி.க நகர் பஸ் நிலையம் எதிரில், 2) வட்டம் 67, சுப்ரமணிய தோட்டம், பெரம்பூர், சென்னை ஆகிய பகுதி களில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இது தான் ஒரே இலக்கு! என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டூர் கோபால்

டிசம்பர் 15 (1978)



தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர், கழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு ‘உழைப்பாளி’ என்ற இதழைத் துவக்கி, அதன் ஆசிரியராகவும் பெரும் பணி ஆற்றினார்.

“இயக்கத்தோடு இணைந்து வளர்ந்த பகுத்தறிவுச் சிங்கம்! ஆயிரம் கொடுமைகள் இழைக்கப்பட்ட போதும் ஆடாது அசையாது இலட்சியம் காத்திட்ட பெருமகன்! நெருக்கடி காலத்தில் மிசாக் கைதியாக இருந்தபோது அவருக்கு கிடைத்த பரிசு நெஞ்சு வலி. அதுவே அவரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டது. தொழிலாளர்களுக்காக வாதாடுகிற திறனும் – போராடுகிற துணிவும் நிறைந்த எனதருமை உடன்பிறப்பு” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு.சீ.வெங்கடாசலம்

டிசம்பர் 15 (2009)



தம் இளம் வயதிலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சேலம் ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

1971 முதல் 1976 வரை சேலம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும், சேலம் சொர்ணபுரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1975ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

விவசாயப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.